பக்கங்கள் நான்கு    விலை ரூபா 4-50

# முரசொலி

முரசு 05    ஒலி 86    பிரமோதூத    மாசி 09
1991 பெப்ருவரி 21ஆம் திகதி    வியாழக்கிழமை

## தமிழ் மொழியை அமுலாக்குவதற்கு திணைக்களங்களில் ஊழியர் போதாதாம்

தமிழ் மொழியை அரச கருமமொழியாக அமுல்படுத்தப் போதிய ஊழியர்கள் இல்லாததால் இந்த வேலைகளைச் செய்ய முடியாது இருப்பதாக அரச கரும மொழித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. அரசின் புதிய ஓய்வூதியத்திட்டத்தின் கீழ் பல ஊழியர்கள் ஓய்வு பெற்றுவிட்டதாகவும், அதனால் பயிற்சி வகுப்பில் திணைக்கள ஊழியர்கள் கலந்து கொள்வதில்லை எனவும் தெரியவருகிறது. அரச திணைக்களங்களில் தமிழ் மொழியை அமுலாக்க போதிய தட்டெழுத்தாளர் சுருக்கெழுத்தாளர் தற்சமயம் இல்லை எனவும் தெரிகிறது. கடந்த நவம்பரில் தமிழ்த்தட்டெழுத்தாளர் நியமனத்திற்கென நடைபெற்ற பரீட்சைக்கு —04 ஆம் பக்கம் பார்க்க

# இந்திய இராணுவ அணிகள் தமிழ்நாட்டில் குவிப்பு!

## வீதித்தடைகள்; சோதனைக் கெடுபிடிகள்!

தமிழ் நாட்டின் கரையோரப் பகுதிகளில் இந்திய இராணுவத்தினர் மேலும் குவிக்கப்பட்டு வருவதாக அங்கிருந்துகிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. அங்கு வந்து இறங்கிய இராணுவத்தினர் சிறுமுகாம்களையும், வீதித்தடைகளையும் ஏற்படுத்தி சோதனைகளில் ஈடுபடுவதாகவும் கூறப்படுகிறது.

கடந்த மாதம் 30ஆம் திகதி தி. மு. க. ஆட்சி கலைக்கப்பட்டு ஜனாதிபதி ஆட்சி பிரகடனப் படுத்தப்பட்டதையடுத்து இந்திய பரா இராணுவத்தின் பதினான்கு அணிகள் அங்கு அனுப்பப்பட்டது தெரிந்ததே.

இதற்கு முன்பு ஜனாதிபதி ஆட்சி பிரகடனப் படுத்தப் —04 ஆம் பக்கம் பார்க்க

## வீரமரணம்

முல்லைத்தீவில் கடந்த 13ஆம் திகதி இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில ஆனந்தராஜ் வீரமரணத்தை தழுவிக் கொண்டார்.

இவருக்கு விடுதலைப்புலிகள தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர். (71)

## ஹெலி பிரசுரம்

நேற்றுக்காலை பலாலியில் இருந்து பருத்தித் துறைக்கு வந்த ஹெலிக்கொப்டர் ஒன்று திடீரென்று தாழ்வாகப்பறந்து துண்டுப் பிரசுரங்களை வீசியது என அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர்.
—04 ஆம் பக்கம் பார்க்க

## புதுக்குடியிருப்பில் குண்டு வீச்சு

நேற்றுக் காலை முல்லைத்தீவு - புதுக்குடியிருப்புப் பகுதியில் குண்டு வீச்சு விமானங்கள் தாக்குதலை நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது சேதவிவரம் எதுவும் தெரியவரவில்லை. (70)

## வெருகல் அணைக்கட்டில் இராணுவத்தின புதிய முகாம்

திருமலை மாவட்டம் வெருகல், ஈச்சிலம்பத்தை பகுதிகளுக்குச் சென்ற இராணுவத்தினர் அங்கு புதிய முகாம்களை அமைததுளளனர்.

வெருகல் அணைகட்டில் இராணுவத்தினர் காவலரண்களையும் அமைத்துள்ளனர். அலிஒலுவ, கல்லாறு முகாம்களிலிருந்து கடந்தசனியன்று வந்த இராணுவத்தினரே இப் புதிய முகாம்களை அமைததுள்ளனர். (71)

## 'குமண' 'வில்லிவில்லி' கப்பல்கள் திடீரென காங்கேசன் சென்றன

பருத்தித்துறை, துறைமுகத்தில் நேற்று முன் தினம் இரவு தரித்து நின்ற 'குமண' 'வில்லிவில்லி' கப்பல்கள் திடீரென காங்கேசன்துறைக்கு கொண்டு செல்லப்பட்டதால் அப்பகுதியில் பதற்றம் நிலவியது.

பின்னர் நேற்றுக் காலை மீண்டும் இக் கப்பல்கள் பருத்தித்துறை துறைமுகத்திற்கு வந்ததுடன் பொருள்கள் இறக்கும் வேலைகளும் சுமுகமாக நடைபெறுகின்றன (70 ப14)

## ஏறாவூர் ஊர்காவற்படை காவலரண் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல்

மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூர்ப் பகுதியில் முஸ்லிம் ஊர்காவற்படையினரின் காவலரண் மீது நேற்றுக்காலை புலிகள் தாக்குதல் நடாத்தினர்.

இத்தாக்குதலின் போது ஊர்காவற் படையினரிடம் இருந்து 303 துப்பாக்கி, ரவைக்கூடு, ரவைகள்- 69 என்பன புலிகளால் மீட்கப்பட்டன. (71)

## மிதிவெடியில் 4 சிப்பாய்கள் காலிழந்தனர்

திருகோணமலை மடுமுகாமில் இருந்து புறப்பட்ட இராணுவத்தினரில் நான்கு பேர் புலிகளின் மிதிவெடியில் சிக்கி தமது கால்களை இழந்தனர்.

சுமார் 300 இராணுவத்தினர் கதிரவெளி, வாகரை, மாங்கேணிப் பகுதிகளில் தேடுதல் நடாத்த வந்தனர். ஆண் —04 ஆம் பக்கம் பார்க்க

## சாவகச்சேரி இலங்கை வங்கியில் 23 இல் நிவாரணக்கொடுப்பனவு

சாவகச்சேரி இலங்கை வங்கிக்கிளையில் நாலாயிரம் ரூபா, ஆயிரம் ரூபா நிவாரணம் காசோலையாகக் கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக வங்கி முகாமையாளர் அறிவித்துள்ளார்.

இதன்படி முன்னர் இவற்றைப் பெறத்தவறியவர்கள் —04ஆம் பக்கம் பார்க்க

## மன்னார்த்தீவில் இருந்து திரும்பிய இரு ஆசிரியர்கள் இராணுவத்தால் கொலை

கடந்த ஞாயிறன்று மன்னார்த் தீவில் இருந்து வந்த ஐந்து ஆசிரியர்களில் இருவரை வங்காலை இராணுவத்தினர் சுட்டுக் கொன்றனர்.

முருங்கன் மத்திய மகாவித்தியாலய உப அதிபர் எஸ். பி. யோசப்பிள்ளை இப் பாடசாலை ஆசிரியர் நவரட்ணம் ஆகியோரே கொல்லப் பட்டவர்களாவர்.
...04ஆம் பக்கம் பார்க்க

## செஞ்சிலுவைச் சங்கம் உதவி

யாழ் மாவட்டத்தில் கடுமையாகப் பாதிப்படைந்த நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்கள் தங்களது நிறுவனம் மூலம் நிவாரணத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

பாதிப்படைந்த ஊழியர்களுக்கு ரூபா400 பெறுமதியான உணவுப் பொட்டலம் வழங்கப்படவுள்ளதாக இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணப்பிரிவு அறிவித்துள்ளது. (74

## கொழும்பு- வவுனியா பயணிகள் தினமும் அவதியுறுகின்றனர்

கொழும்பிலிருந்து யாழ் வரும் பயணிகளை வவுனியாவில் படையினர் கடுமையாகச் சோதனையிடுவதாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதே வேளை, யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்வதற்கு வவுனியாவில் உள்ள கோயில்களிலும், பாடசாலைகளிலும் 9000 க்கும் மேற்பட்ட பிரயாணிகள் தவம் கிடப்பதாகவும் ஏழு தினங்களாக கொழும்பு போகமுடியாத பலர் மீண்டும் யாழ்ப்பாணம் திரும்புகின்றனர். (ப-11)

## க.பொ.த. [உ.த] விண்ணப்பம் ஓகஸ்ட் வரை நீடிப்பு

க. பொ. த. உயர்தரம் 91ஆம் ஆண்டுக்கான பரீட்சை விண்ணப்பம் ஓகஸ்ட் வரை நீடிக்கப்படலாம் எனத்தெரிய வந்துள்ளது.

இதனால் 90ஆம் ஆண்டு இப் பரீட்சைக்கு தோற்ற முடியாதவர்களும், இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்எனத்தெரிவிக்கப்படுகிறது.

## பேசாலையில் இராணுவம் மீது தாக்கு

மன்னார் மாவட்டம் பேசாலைப் பகுதியில் நேற்று இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தியுள்ளனர்.

பேசாலை ஓலைத்தொடுவாய்ப் பகுதியில் ரோந்து வந்த இராணுவத்தினர் மீது நேற்றுக்காலை 11 மணி ... 4ஆம் பக்கம் பார்க்க

## தமிழக சட்டப்பேரவை கலைப்பு திரை மறைவில் நடந்தவை

தமிழக சட்டப்பேரவையை கலைத்து அங்கு ஜனாதிபதி ஆட்சியை கொண்டுவர நீந்திய மத்திய அரசு திரைமறைவில் மேற்கொண்ட முயற்சிகள் தற்போது அம்பலமாகி வருகின்றன. குறித்து செய்திகளும் வெளிவரத்தொடங்கியுள்ளன.

இத்தகவல்களின்படி ஆட்சிக் கலைப்பு தொடர்பாக அறிக்கை ஒன்றை தயாரிக்குமாறு ஆளுநர் பர்னாலவை 'மிரட்டும்' நோக்கில் அவர் புதுடில்லியில் உள்ள ஒரு ஹோட்டலில் தங்க வைக்கப்பட்டு 'றோ' உளவுத்துறை அதிகாரிகளும் மத்தியபுலனாய்வு — 04 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு கிழக்கு நெருக்கடியை இவ்வருட ஜூனுக்குள் 'முடிப்பேன்' என்கிறார் ரஞ்சன்

'வடக்கு கிழக்கு நெருக்கடியை இவ்வருடம் ஜூனுக்குள் முடித்துவிடுவேன்'

இப்படித் தெரிவித்திருக்கிறார் பாதுகாப்பு இணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா.

நாரகன்பிட்டியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் ருவான்வல்ல தொகுதி கிளையின் மத்தியசபைக்கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு அவர் தெரிவித்திருக்கிறார்.

## மீளக்குடியமர்தல் நிவாரணக்கொடுப்பனவை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை

கடந்த காலங்களில் வழங்கப்படாமலிருந்த 4000 ரூபா 2000ரூபா நிவாரணம் வங்கிக் கட்டளைகள் மூலம் வழங்கப்படவிருப்பதாக இலங்கை வங்கியின் யாழ் மாவட்ட முகாமையாளர் கணேசமூர்த்தி தெரிவித்தார்.

அரசாங்க அதிபர் கொழும்பிலுள்ள புனர்வாழ்வு அமைச்சுடன் தொடர்புகொண்டதன் பலனாகவே இது யாழ் மாவட்டத்திலுள்ளவர்களுக்கு கிடைக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்,

இக்கொடுப்பனவு பற்றிப் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்,

(ப 11)

## 2 - வது பிறந்த தின வாழ்த்து
### 21 - 02 - 1991



### ★ செல்வன் மதுர்ஷனன் ★

முனைத்தீவு பெரிய போரதீவைச் சேர்ந்த திரு. நவரெத்தினம் யோகம்மா தம்பதிகளின் செல்வப் புதல்வன் மதுர்ஷனன் தனது இரண்டாவது பிறந்த நாளை பிரம்படிலேன் கொக்குவிலிலுள்ள தனது இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடுகின்றார். அவரை அம்மா, அப்பா, அம்மப்பா, மாமா, ஏறாவூர் அப்பம்மா, மாமா, மாமிமார், மச்சான். மச்சாள்மார். முனைத்தீவு அம்மம்மா, பெரியம்மா, பெரியப்பா, அக்கா, அண்ணன்மார், மாமா, மாமி, மச்சாள்மார், பல்கலையும் பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

02109

## பட்டதாரி சம்பளம்பெறாத ஆசிரியர்களுக்கு நியமனம் விரைவில் கிட்டும்

தற்போது ஆசிரிய சேவையில் உள்ள பட்டதாரிச் சம்பளம் பெறாத பட்டதாரிகளுக்கு விரைவில் பட்டதாரி ஆசிரிய நியமனம் வழங்கப்படவுள்ளது.

இதன் பொருட்டு சேவையிலுள்ள பட்டதாரிச் சம்பளம் பெறாத பட்டதாரி ஆசிரியர்களின் விபரங்களை கல்விச்சேவை ஆணைக்குழு திரட்டி வருகின்றது.

1988 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பட்டம் பெற்றவர்களுக்கே இந்த நியமனம் வழங்கப்படவுள்ளது

அத்துடன் இக்காலப்பகுதியில் பட்டம்பெற்ற பயிலுநர் ஆசிரியர்களின் விபரங்களையும் திரட்டுமாறு கல்விப்பணிப்பாளர்கள் பணிக்கப்பட்டுள்ளனர். (ப-17)

### உள்ளூர் உற்பத்தியில் வினாத்தாள் தயாரிப்பு

நல்லூர் காகித ஆலையில் உள்ளூர் மூலப்பொருட்களை கொண்டு உற்பத்தி செய்யப்பட்ட காகிதங்களைப் பயன்படுத்தி முதற்கட்டமாக யாழ் கல்வி மாவட்டத்துக்குத் தேவையான வினாத்தாள்கள் அச்சிடப்பட்டுள்ளன.

கடந்த வாரம் இடம்பெற்ற ஆண்டு ஆறு அனுமதித் தேர்வுக்கான போட்டிப் பரீட்சைக்கு இக்காகிதத்தில் அச்சடிக்கப்பட்ட இவ்வினாத்தாள்களே வழங்கப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ப-11)

### ஸ்ரீ காமாட்சி நிர்வாகிகள்

நாச்சிமார் கோவிலடி ஸ்ரீ காமாட்சி சனசமூக நிலையத்தின் 23-ம் ஆண்டு நிர்வாகிகள் தெரிவு அண்மையில் நடைபெற்றது.

இத் தெரிவில் புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் : பா ஸ்ரீதரன், செயலாளர் : த சுதாகர், பொருளாளர்: அ. செல்வகுமார், உப தலைவர் : இ. கணேசராசா, உப செயலாளர் : கி. கோபிரஞ்சன், சமயத்துறை அமைப்பாளர் : வ றஞ்சன் விளையாட்டுத்துறை அமைப்பாளர் : ச. விக்னேஸ்வரன், சமூக சேவைத்துறை அமைப்பாளர் : து. சாந்தகுமாரி, பொதுசனத் தொடர்புத் துறை அமைப்பாளர் : ஆ. குமரன். (74)


### சிறு விளம்பரம்

#### விற்பனைக்கு

தூரிதமான சிக்கன சலவைக்கு மில்க்வைற் திரவ சவர்க்காரம் Liquid Soap, விளக்கெரிக்க வேப்பெண்ணை மானிப்பாய் ப. நோ. கூ. சங்கத்திலும் விற்பனையாகிறது

02110


## சிறிய செய்திகள்

### கட்டணம் அதிகரிப்பு

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் நடப்பு வருடத்தில் இருந்து பரீட்சைக் கட்டணங்களை க. பொ. த. சாதாரணம், உயர்தரம் ஆகியவற்றுக்கு 20 முதல் 40ரூபா வரை உயர்த்தியுள்ளது.

இவ்வாண்டு முதல் க. பொ. த. சாதாரண பரீட்சைக்குத் தோற்றும் அபேட்சகர் ஒருவருக்கு 97.50 ஆகவும், உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் அபேட்சகருக்கு ரூபா 185 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. (16)

### பாடசாலையில் மூலிகைத் தோட்டம்

பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயத்தில் பாரம்பரிய மருத்துவ முறைக்குப் பயன் படக்கூடிய மூலிகைச் செடி வளர்க்கும் செயற்திட்டம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. இத் திட்டத்தை மேற்படி பாடசாலையின் ''விஞ்ஞான மன்றம்'' ஆரம்பித்துள்ளது 10 ம், 11 ம் ஆண்டு மாணவர்களினால் இது தொடர்பான ஆய்வுகள்மேற்கொள்ளப்பட்டு. வெகு விரைவில்இதன் முடிவுகள் ஆய்வுப் புத்தகமாக வெளியிடபபடும் என இப்பாடசாலையின் அதிபர் தெரிவித்துள்ளார்.

### கேர்க் டக்ளஸ் படுகாயம்

பிரபல ஹொலிவூட் நடிகரான கேர்க் டக்ளஸ் விபத்தொன்றில் சிக்கிப் படுகாயமடைந்தார்.

நான்கு ஆஸ்கார் விருதுகளைப் பெற்ற கேர்க்டக்ளஸ் ஒரு ஹெலிகொப்டரும் சிறிய விமானமும்மோதிக் கொண்டதன் காரணமாகச் சிக்கினார்.

72 வயதான அவரது விலா எலும்புகள் முறிந்துள்ளன. (16)

### தாச்சிச்சுற்றுப்போட்டி

அரியாலை காந்தி சனசமூக நிலையமும், காந்தி விளையாட்டுக் கழகமும் இணைந்து மாபெரும் தாச்சிச் சுற்றுப் போட்டியினை நடாத்துகின்றன.

கடந்த 15ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்ட இச்சுற்றுப்போட்டியில் 90 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றுகின்றன. ஏ, பி, சி என மூன்று பிரிவுகளாக நடைபெறும் இச்சுற்றுப் போட்டியில் ஒவ்வொரு பிரிவுக்கும் வெற்றிக்கிண்ணம் வழங்கப்பட இருப்பதுடன், ஒவ்வொரு பிரிவிலிருந்தும் தெரிவு செய்யப்படும் தலா இரண்டு விளையாட்டுக் கழகங்களுக்கிடையே மீண்டும் ஒரு போட்டியினை நடாத்தி அதில் வெற்றி பெறும் விளையாட்டுக் கழகத்துக்கு உயர்ந்த பரிசும் வழங்கப்படவிருக்கின்றது. (47)

### உற்பத்தி அதிகரிப்பு

இலங்கையின்தேயிலை உற்பத்தி 1989ஆம்ஆண்டைவிட 1990 இல் பன்மடங்கு அதிகரித்துள்ளது

1989 ஜனவரி- பெப்ரவரி மாதங்களில் 26 4 மில்லியன் கிலோ தேயிலை உற்பத்தி செய்யப்பட்டது. ஆனால்1990 இதே காலப் பகுதியில் இவ் உற்பத்தி 35. 3 மில்லியனாக அதிகரித்துள்ளது.

1989ஆம் ஆண்டில் அதிகளவில் வரட்சி நிலவியதும் கடந்த ஆண்டில் தேயிலைச் செய்கைக்கு ஏற்ற காலநிலை நிலவியதுமே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் அதிகரித்த உற்பத்திக்கு ஏற்ப வெளிநாடுகளுக்குத் தேயிலையை அனுப்பி விற்பனை செய்ய முடியாதிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ப-1)

★ 'உண்மையின் குரல்' வெளிப்படுகிறது: சிலாபம் ஆயர் குற்றச்சாட்டு:

# பௌத்தமத மேம்பாட்டுக்காக ஸ்ரீலங்கா அரசு

# சிறுபான்மை மதங்களை நசுக்கி, ஒடுக்கி வருகிறது!

ஸ்ரீலங்கா அரசு பௌத்தமத மேம்பாட்டுக்காக இங்குள்ள சிறுபான்மை மதங்களின் உரிமைகளைப் பறித்து வருவதாக சிலாபம் மறை மாவட்ட கத்தோலிக்க ஆயர் பேரருட் திரு பிராங் மார்க்கஸ் பெர்னாண்டோ குற்றம் சாட்டியுள்ளார்.

அரசு தனது பிரசாரத்திற்கும், பௌத்த சாசன வளர்ச்சிக்கும் அதிகளவில் தொலைக்காட்சியையும் ஏனைய வெகுஜன சாதனங்களையும் பயன்படுத்தி வருகின்றது. ஆனால் இலங்கையின் சிறுபான்மை மதங்கள் தமது நாளாந்த நற்சிந்தனைகளை வழங்கவோ, நிகழ்ச்சிகளை நடாத்தவோ பெரும் கட்டுப்பாடுகளை விதித்துள்ளது எனவும் ஆயர் மார்க்கஸ் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

சில தினங்களுக்கு முன்னர் சிலாப மறை மாவட்ட சமூக ஆணைக்குழுக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பலகாலமாக பல குடும்பங்களின் சீவியவழியாக இருந்த உள்நாட்டு நன்னீர் மீன்பிடிப்பை அரசு சில பௌத்த குருமாரின் 'கிறுக்கல்' கடிதங்களுக்குப் பயந்து ஒரு இரவிலேயே தடைசெய்து விட்டது எனவும் சிலாபம் ஆயர் அங்கு தெரிவித்தார்.

## 'ஐந்துசதம்கூட பெறுமதியற்றோரே இறு பௌத்தர்களாக உள்ளனர்'

"ஐந்து சதம் கூடபெறுமதியில்லாதவர்கள் பௌத்தர்களாக இருப்பதால்தான் பௌத்தர்கள் மதிப்பிழந்துள்ளனர்" என்று சர்வோதய இயக்கத்தலைவர் கலாநிதி ஏ.ரி. ஆரியரத்ன ரத்கமயில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

"அந்நியரின் கலாசாரத்தைப் பின்பற்றி நாம் சீரழிந்து கொண்டிருக்கிறோம். தாய்ப்பால் ஊட்டுவதைத் தாய்மார் தவிர்த்து வருகின்றனர். புட்டிப் பாலூட்டுவதால் பாசம் குறைந்து விடுகிறது. இந்த நிலைமையை உருவாக்கியுள்ள பொறுப்பு வெளிநாட்டுக் கம்பனிகளையே சாரும் இதனையிட்டு எந்த ஒரு அரசியல்வாதியும் பேசுவதில்லை" என்றும் அவர் சொன்னார்.

## பௌத்த நிலையம் புனரமைக்க 10 லட்சம் ரூபா நிதி

அனுராதபுரத்தில் உள்ள விருதது வித்திய பௌத்த நிலையத்தின் புனர் நிர்மாணத்துக்கு பத்து லட்சம் ரூபாவை ஜனாதிபதி நிதியிலிருந்து ஜனாதிபதி வழங்கியுள்ளார்.

## குருபூசை

தவத்திரு கந்தையா சுவாமிகளின் ('குடைச்சாமியார்') குருபூசை இன்று வியாழக்கிழமை கோண்டாவில்கிழக்கு ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

# ஜேர்மனியில் வேலையின்மை, விலையுயர்வு!

# அகதிகளாக உள்ள தமிழர்களும் பாதிப்பு!!

இரு ஜேர்மனிகளும் ஒன்றாக இணைக்கப்பட்டதையடுத்து இரு பகுதிகளிலும் மொத்தம் 15 லட்சம் பேர் வேலையிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தொகையில் மூன்றரை லட்சம் பேர் கிழக்கு ஜேர்மனியைச் சேர்ந்தவர்கள்.

தற்போது ஜேர்மனியில் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் உயர்ந்துள்ளதுடன், தொழிலாளர்களின் ஊதியம் 20 முதல் 25 சதவீதம் குறைந்துள்ளது.

மக்களிடம் வாங்கும் சக்தி இல்லாததால்கிழக்குஜேர்மனியின் தொழிற்சாலைகளை வாங்க ஆட்கள் இல்லை. மேற்கு ஜேர்மனி முதலாளிகள் கிழக்கு ஜேர்மனியைத் தங்கள் சந்தையாகப் பயன்படுத்தவே விரும்புகிறார்கள் இவ்வாறு அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையால் ஜேர்மனியில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்கள் பெரும் நெருக்கடியை எதிர்நோக்கி வருகின்றமையும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## வடக்கு, கிழக்கு ஆசிரியர்களின் தற்காலிக இடமாற்றங்கள் ரத்து

[illegible] அசம்பாவிதங்களினால் பாதிக்கப்பட்ட வட-கிழக்கு ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட தற்காலிக இடமாற்றங்கள் யாவும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

இதற்கமைய ஆசிரியர்கள் அனைவரும் முன்பு கடமையாற்றிய பாடசாலைகளுக்கு சமுகம் கொடுக்க வேண்டும்

அப்பாடசாலைகள் இயங்காமல் இருப்பின் அதற்குரிய கொத்தணிப் பாடசாலையிலோ அல்லது கோட்டத்திலோ கடமையாற்ற வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## 'வடக்கில் பட்டினி அவலம்'

"வடபகுதியில் பணப் புழக்கமும் மிகக் குறைவாகவே உள்ளது பெரும்பாலானவர்கள் ஒருநேர உணவுடனேயே அல்லற்படுகின்றனர்" என்று நவசமசமாஜக் கட்சி, ரஞ்சன் விஜயரத்னவிற்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது.

"மனிததத்துவத்தின் பெயரால் வடக்கில் பட்டினி அவலத்தைத் தணிக்க உதவுங்கள்" என்றும் இதில் கோரப்பட்டுள்ளது.

## மகஸின் சிறையில் விசாரணை இன்றி 78 தமிழ் இளைஞர்கள் தடுத்துவைப்பு!

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கொழும்பு மகஸின் சிறைச்சாலையில் வட-கிழக்குப் பகுதியைச் சேர்ந்த 78 பேர் தற்பொழுது தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 20 பேர் மட்டு. மாவட்டத்தையும், 40 பேர் அம்பாறை மாவட்டத்தையும் 18பேர் யாழ்,கிளி, மன்னார், வவுனியா மாவட்டங்களையும் சேர்ந்தவர்கள்.

இவர்களில் சிலர் கடந்த ஒருவருட காலத்திற்கும் மேலாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

# 'பத்திரிகை போராட்ட காலத்தின் தேவை!' 'ஈழநாதம்' விழாவில் மு. பொ.

"ஒரு தொடர்புச் சாதனமென்பது அது வெளிவரும் காலத்தின் குரல். அது பிரதிநிதித்துவப் படுத்தும் மக்களின் அரசியல், சமூக, பொருளாதார, கலாசார உந்துதல்களின் வெளிப்பாடு. விடுதலைப் போராட்டம் நடக்கும் இக்காலகட்டத்தில் தமிழ் ஈழத்தில் ஒரு பத்திரிகையின் தேவை எழுந்தபோது 'ஈழநாதம்' பிறந்துள்ளது."

இவ்வாறு ஈழநாதத்தின் ஓராண்டு நிறைவையொட்டி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்ற விமர்சன அரங்கில் பேசிய 'திசை' ஆசிரியர் மு. பொன்னம்பலம் குறிப்பிட்டார். நிகழ்ச்சிக்கு யாழ். இந்துக்கல்லூரி முன்னாள் உபஅதிபர் க. சிவராமலிங்கம் தலைமை வகித்தார்.

"இப்பத்திரிகை தமிழீழ மக்களின் செய்திப் பத்திரிகையாக இருக்கும் அதே நேரத்தில், அவர்களை விடுதலையை நோக்கி வழிப்படுத்துவதாகவும். எதிர்க்கருத்துக்களைச் சந்தித்து விடுதலைக்குமேலும் உரமிடக்கூடியதாகவும் இருக்க வேண்டும்" என்றார் மு. பொ.

தலைவர் தமது தொகுப்புரையில், "இன்று தமிழீழத்தில் வெளிவந்து கொண்டிருக்கும் நாலு பத்திரிகைகளும் இனவிடுதலை என்ற இலக்கை நோக்கியே நடைபோடுவது மனநிறைவு தருகிறது" என்றார்.

# அல்லைப்பிட்டி, காரைநகரில் 'கண்டம்' கழிவு ஆனால் கொழும்பில் உயிர் பிரிவு

யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த வாலிபர் ஒருவர் கொழும்பில் மர்மமான முறையில் மரணமடைந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

அல்லைப்பிட்டியைச்சேர்ந்த வாமதேவன் மகாதேவன் (20) என்ற இளைஞரே மர்மமான முறையில் மரணமடைந்தவராவார்.

இவர் அல்லைப்பிட்டியில் இராணுவ நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருந்தவர். பின்னர் விடுதலை செய்யப்பட்டதும் இந்தியாவுக்கு பாதுகாப்புத்தேடி செல்ல முற்படுகையில் கடலில்வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்டு காரைநகரில் தடுத்து வைக்கப்பட்டிருந்து பின்னர் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

பிரான்ஸிற்குப் பயணமாகவிருந்த இவர் அதற்கு முன்னர் மர்மமரணத்தை அடைந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ப-11)

# இடம்பெயர்ந்த 40 குடும்பங்களுக்கு வடமராட்சியில் மீன்பிடித் தொழில் வாய்ப்பு

வடமராட்சி கிழக்கில் தங்கியிருக்கும் இடம் பெயர்ந்த மக்களுக்கு தொழில் வாய்ப்பு வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டுள்ளன.

வண்ணாங்குளம், கட்டைக்காடு போன்ற பகுதிகளில் கரைவலை மீன்பிடித்தொழில் தொடங்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு கரைவலையிலும் சுமார்40 இடம்பெயர்ந்த மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இப்பகுதிகளில் மேலும் பல கரைவலை தொடங்குவதற்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நடவடிக்கைகள் காரணமாக இங்குள்ள அனைத்து இடம்பெயர்ந்த மக்களுக்கும் தொழில்வாய்ப்பு ஏற்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்நடவடிக்கைகளை தமிழீழ விடுதலைப்புலிகளே மேற்கொண்டு வருகின்றனர். (43)

# சர்வதேச நாணய நிதியத்திடம் - அரசு 50 கோடி டாலரை கடனாகக் கேட்கிறது

இலங்கை அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து இவ்வருடம் ஐம்பது கோடி டாலர்களை கடனாகக் கோர விருப்பதாக அரசாங்கத்தின் சிரேஷ்ட பொருளியல் நிபுணர் ஒருவர் தெரிவித்தார்

வெளிநாட்டில் வேலை செய்யும் இலங்கைத் தொழிலாளர்களின் வருமானத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியினால் வருடமொன்றுக்கு 10 கோடி டாலர்களுக்கும் 15 கோடி டாலர்களுக்கும் இடைப்பட்ட தொகையை அரசு இழப்பதை சாட்டாக வைத்தே இந்த உதவி கோரப்படுவதாகவும் பெயர் குறிப்பிட விரும்பாத அந்த நிபுணர் தெரிவித்தார்.

# சோவியத் திட்டத்திற்கு ஈராக்கின் பதிலிலேயே தரைப்போர் ஆரம்பம் உள்ளது

சோவியத்தின் சமாதானத் திட்டத்திற்கு ஈராக் அளிக்கப் போகும் பதிலில் வளைகுடாப் போரின் தரைத் தாக்குதல் ஆரம்பம் தங்கியுள்ளது. இதேவேளை ஈராக் தனது பதிலை அளிக்கும்வரை அமெரிக்கா தரைத் தாக்குதலை ஆரம்பிக்கக்கூடாது என ரஷ்யா எச்சரித்துள்ளது. சதாம் ஹுசையினின் பதிலுடன் ஈராக்கிய வெளியுறவு அமைச்சர் அஸிஸ் மொஸ்கோ செல்ல ஆயத்தமாகி விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனிடையே சதாமின் தனிப்பட்ட உத்தரவின் பேரில் ஈராக் பிரதிப் பிரதமர் ஹமாதி சீனா சென்றுள்ளார்.

சோவியத்தின் சமாதானத் திட்டத்தை நிராகரித்து விட்டதாக அறிவித்த அமெரிக்க, பிரிட்டிஷ் தலைவர்கள் தற்போது போக்கை மாற்றித் தாம் சமரசத் திட்டத்தை நிராகரிக்கவில்லை என்றும் அத்திட்டத்தில் போரை நிறுத்தக்கூடிய யோசனைகள் இல்லை என்றே தாம் கூறியதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

## ஹெலி...

இதேபோல நேற்று மாலை மல்லாகம், சுன்னாகம் பகுதிகளில் ஹெலிக்கொப்டர் ஒன்று துண்டுப் பிரசுரங்களை வீசிச் சென்றது. (ப-10, ப-11)

## மிதிவெடியில்...

டான் குளம் மாணிக்கம் பகுதியில் விடுதலைப் புலிகள் இவர்கள் மீது தாக்குதல் நடாத்தினர். சேத விவரம் தெரியவில்லை. (71)

## தமிழ்...

தோற்றியவர்களுக்கு இன்னும் நியமனம் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (33)

# காலமானார்

## திரு. த. இராசலிங்கம்

(உடுப்பிட்டித் தொகுதி
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)

திரு. த. இராசலிங்கம் நேற்று (20. 02. 91) காலமானார். அன்னார் சரஸ்வதியின் அன்புக்கணவரும், பத்மலிங்கம், இந்திரலிங்கம், சிவாஜினி, இராசேந்திரலிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற செல்வராசா (ஆசிரியர்), தங்கராசா, திரு. துரைராசா (ஆசிரியர்), திருமதி. மீனாட்சியம்மா சாம்பசிவம் ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற டாக்டர் சாம்பசிவம், திரு. த. தருமராசா ஆகியோரின் மைத்துனரும், திரு. செ. செல்வலிங்கம் (கிராமசேவையாளர்), செ. சந்திரலிங்கம் (ஜேர்மனி) செ. ஆனந்தலிங்கம் (கனடா), த. யோகலிங்கம் (சுங்கத்திணைக்களம் கொழும்பு), த. அசோகலிங்கம் (யாழ் பல்கலைக்கழகம்), து. சத்தியலிங்கம் (மொறட்டுவ பல்கலைக்கழகம்), செ. சோதிலிங்கம் (யாழ் பல்கலைக்கழகம்), செல்வி. இரஞ்சினிதேவி துரைராசா (ஆசிரியர் கலாசாலை கோப்பாய்) ஆகியோரின் சிறிய தந்தையாரும் திரு. வே. தம்பிமுத்துவின் மருமகனும், திரு. ச. ஸ்ரீதரன் (மக்கள் வங்கி மாங்குளம்), திரு. மா. ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோரின் மாமனாரும், டாக்டர் க. வல்லிபுரம், திரு. இ. சந்தவனம் (பொதுச் சுகாதாரத்திணைக்களம் யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற இ. இரத்தினராசா (ஆசிரியர்) ஆகியோரின் ஒன்று விட்ட சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 21. 2. 91 வியாழக்கிழமை பி. ப. 3. 00 மணிக்கு நடைபெறும்.

''ராஜ்மகால்''
அல்வாய் தெற்கு,
அல்வாய்.

குடும்பத்தினர்
தகவல்: செ. சோதிலிங்கம்
02116

இப்பத்திரிகை முரசொலி பப்பிளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கஸ்தூரியார் வீதி, 'லக்ஷ்மிபில்டிங்ஸ்' உள்ள அச்சகத்தில் 21-02-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

# அகதிகளை இலங்கையில் மீளக்குடியமர்த்த தொண்டர் நிறுவனங்கள் பொறுப்பு ஏற்க மறுப்பு

இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகளை இங்கே திருப்பி அனுப்பி அவர்களை மீளக்குடியமர்த்த எந்த ஒரு தொண்டர் நிறுவனமும் பொறுப்பு எடுக்க முன்வரவில்லை என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக இலங்கை அரசு சில தொண்டர் நிறுவனங்களின் உதவியை நாடியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தமிழ் நாட்டில் உள்ள அகதிகளை அவர்களின் சுயவிருப்பம், பாதுகாப்பு இன்றி மீளக் குடியமர்த்த முடியாது என இத்தொண்டர் நிறுவனங்கள் இலங்கை அரசுக்குத் தெரியப்படுத்தியுள்ளதாகவும் அச்செய்திகள் தெரிவித்தன.

## சாவகச்சேரி...

உரிய அத்தாட்சிப்பத்திரங்களுடன் 23ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு சமூகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழக

அதிகாரிகளும் அவரைத் தம் போக்குக்கு இழுக்க முயற்சி செய்தனர்.

இதை அறிந்த முன்னாள் பிரதமர் வி. பி. சிங் தலைமையிலான தேசிய முன்னணியினா ஜனாதிபதி வெங்கட்ராமனை சந்தித்து நிலைமையை விளக்கி ஆட்சிகலைப்புக்கு இணங்க வேண்டாம் எனக் கோரினர். அப்போதே ஜனாதிபதிக்கு கூட தமிழக ஆளுநர் பர்னாலா 'இரகசியமாக' டில்லி அழைக்கப்பட்ட விடயம் தெரியவந்ததாம்.

நித்திரைக்கு சென்றுவிட்ட ஜனாதிபதி வெங்கட்ராமன் இரவு 10. 15 மணியளவில் நித்திரை குழப்பப்பட்டு ஆட்சிக் கலைப்பு பிரகடனத்தில் கையெழுத்திடுமாறு அவசரப்படுத்தப்பட்டார். தொடர்ந்து இரவு10.30மணிக்கு தொலைக்காட்சி செய்தி அறிக்கையைக் கூட தாமதப்படுத்தி ஜனாதிபதியின் ஆட்சிகலைப்பு பிரகடனம் அறிவிக்கப்பட்டது. (33)

## பேசாலை...

யளவில் விடுதலைப்புலிகள் துப்பாக்கித் தாக்குதல் நடாத்தினர்.

இத் தாக்குதலைத் தொடர்ந்து இராணுவத்தினர் தப்பி ஓடத்தொடங்கினர். இவர்களை விடுதலைப் புலிகள் துரத்திச் சென்று தொடர்ந்து தாக்குதலை நடாத்தினர்.

இத்தாக்குதலில் ஒரு சிப்பாய் கொல்லப்பட்டார். சடலமும் புலிகளால் மீட்கப்பட்டது. இம் மோதலில் இராணுவத்தினரிடமிருந்து ரி-81 1, ரவைக் கூடுகள் - 5 203ரிவோல்வர்-1 ஜி.எம்ரவைகள்-350 கோல்ஸர் ஆகியவை புலிகளால் மீட்கப்பட்டன. (71)

## மன்னார்த்தீவில்...

முருங்கன் மத்திய மகா வித்தியாலய ஆசிரியர் செபமாலை, வங்காலையைச் சேர்ந்த ஆசிரியர் விமதோனி குருஸ், புதுக்குளம் றோமன் கத்தோலிக்க பாடசாலை அதிபர் ஜஸ்டின் ஆகியோர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (71)

## இந்திய...

படை வேளைகளில் இவ்வாறு இராணுவத்தினர் அங்கு அனுப்பப்படவில்லை என்றும், மத்திய அரசின் இந்நடவடிக்கையால் தமிழ் மக்களின் அன்றாட வாழ்வு பாதிக்கப்படலாம் என்றும் அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். (70)

# 31-வது நாள் நினைவஞ்சலி

வீரஜனனம்:
20. 02. 1968

வீரமரணம்:
22. 01. 1991

மகளிர் படை இராணுவ தளபதி

## மேஜர் தாரணி

சுப்பிரமணியம் - மதிவதனி
அத்தாய், பூநகரி.

மண்ணை நேசித்ததால்
மக்களை நேசித்தவள்
மரணம் என்பதனை விரும்பியே யாசித்தவள்
பதினாறு வயதினிலே பள்ளிப்படிப்பை துறந்தாய்
உனது பந்த பாசங்களை மறந்தாய்
புல்லரிக்கும் காட்டினிலே புளுதி மணல் மேட்டினிலே
எம் விடுதலையே எமக்கு இலக்கான பொழுது
உனக்கு மட்டுமேன் மலர் மாலையாயிற்று
யாழ்ப்பாண நகரினிலே பலாலிப் பொறுப்பேற்று
கட்டுவன் என்னும் இடத்தினிலே அந்நியப்
படைகளுடன் உனது தோழர்களை வைத்து
பெரும் போர் ஆடி வந்தாய்
அந்த அந்நியனின் குண்டுகள் உன்
மார்பு மீது அழுத்தியதால் எதிர் காலம்
என்பது உனக்கு எட்டாத கனியாக
பலாலி மோதலில் பகல் கனவானது
எதிரியின் குண்டுகள் உன் கண்ணை
துளைத்த போது உன் கனவுகள்
எம் கற்பனைகள் காற்றோடு காற்றாக கரைந்தன
ஓ விடுதலை வேங்கையே விடுதலைக்கு விறகானாய்
மறுபிறப்பென்று ஒன்றிருந்தால் அதில் மரணம்
உன்னை தழுவும் வரை
விடுதலைப் பெண் புலியாக வீரமிகு தமிழ் மகளாக
வந்து உதித்து விடு வீரமிகு தமிழீழ மண்ணிலே
உன் ஆத்ம சாந்திக்காக.

உன் பிரிவால் துயருறும்
தந்தை, தாய், சகோதரிமார்,
அத்தான்மார், பிள்ளைகள்,
மாமா, மாமி, பேரன், பேர்த்தி,
உறவினர்.

அத்தாய்,
பூநகரி.
02117